அறிவிக்க வேண்டியிருந்தால் அறிவிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். Madras Bus passengers Association மட்டும் இந்த டாக்சிகளின் சொந்தக்காரர்கள், டிரைவர்கள், அதே போன்று பயணம் செய்பவர்கள் ஆகியவர்களை வைத்து ஒரு கான்ஃபரன்ஸ் நடத்தி, அதன் மூலம் இத்தகைய கட்டணங்களை உயர்த்த வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். இந்த 30 நாள் தவணை ஜூலை மாதம் முதல் தேதியோடு முடிவடைகிறது. அதற்குப்பிறகுதான் இதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு, டாக்சிகளுக்கு கட்டணம் உயர்த்தப்பட்ட பின்பு, இப்பொழுது ஆட்டோரிக்ஷாக்கள் இவைகளில் மீட்டர் சரியாக ஓடுவதில்லை. இதனால் பொதுமக்களுக்கும் வண்டி ஓட்டுபவர்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. இதைப்போக்கும் முறையில் கட்டண மாறுதலுக்குப் பிறகு மீட்டர்கள் சரியாக ஓடுகின்ற முறையில் மாறுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையையும் அரசாங்கம் கவனத்திற்கொண்டு நிறைவேற்றும்.

CentreqStateRelations Inquiry Committee.

* 36 *Q.*—Dr. H. V. HANDE
Thiru A. SWAMIDHAS
Thiru K. T. THANGAMANI
Thiru S. DURAISAMY

Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government has appointed a three man commission to go into the sharing of powers between Central and State Governments; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு செப்டம்பரில் டாக்டர் பி. வி. ராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், திரு. பி. சந்திரா ரெட்டி, டாக்டர் ஏ. எல். முதலியார் ஆகியோரை ஏனைய உறுப்பினர்களாகவும் கொண்ட "மத்திய-மாநில உறவுகள் ஆய்வுக்குழு" என அழைக்கப்படும் ஒரு குழுவினை அரசு அமைத்தது. அரசியலமைப்பில் தற்போதுள்ள விதித்துறைகளை ஆய்ந்து இம்மாநிலத்தின் நிதிவாயில்களைப் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பற்றியும், நாடு முழுவதிலும் ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராத வகையில் மாநிலத்தின் நிர்வாகம், சட்ட மன்றம், (உயர்நீதி மன்றம் உள்ளிட்ட) நீதித்துறை இவற்றில் பெருமளவிற்குச் சுயாட்சி உரிமைகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பற்றியும் கருத்துரை வழங்கும்படி அக்குழு வேண்டப்பட்டது. குழு தனது அறிக்கையை 1971,

1971 ஜூன் 24]

மே 27-ம் நாளன்று அரசுக்குப் பணிந்தனுப்பியுள்ளது. அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. அறிக்கையின் படிகள், இந்தியா வெங்குமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இம்மாநில சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், மத்திய அமைச்சர்களுக்கும், மாநில முதல் அமைச்சர்களுக்கும், அரசியல் கட்சித் தலைவர் களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அவர்களது கருத்துக்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

DR. H. V. HANDE: Sir, while it is quite reasonable for us to expect greater devolution of funds and greater areas of taxation and such other non-controversial subjects to be earmarked for States, is the Hon. Chief Minister aware that by opening the flood-gates of State autonomy, the interests of the State in matters like sharing of river waters and power supply are adversely affected? Also, in the matter of implementation of the prohibition policy, he wants the Centre to evolve a uniform policy for the whole country. In view of all these things, will the Hon. Chief Minister realise that the built-in danger inherent in the State autonomy will recoil on ourselves and so will the Government stop making an issue out of it and pursue only to the extent that it is consistent with the interests of this Government and the State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நம்முடைய சட்டப் பேரவையிலேயே ராஜமன்னார் குழு அறிக்கை பற்றி ஒரு நாள் விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் அவை அலுவல் குழுவிலே பேசப் பட்டது. அதற்காகத் தனியாக விவாதம் வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அப்போது இதைப் பற்றியெல்லாம் தாராளமாகப் பேசலாம் என்ற கருத்தில் இதற்குமேல் எந்த விரிவான விளக்கமும் சொல்ல இப்போது விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா எண் 37 . . .

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

THIRU K. T. K. THANGAMANI: I want to make one submission. We have taken some pains to table this question. We have got some supplementaries to put. It is but fair that we should be given an opportunity.

MR. SPEAKER: The Hon. Chief Minister has the right either to give an answer or not. He had declined to answer further questions. The Hon. Chief Minister has said that he was not going to answer further questions.

THIRU K. T. K. THANGAMANI: He had given a limited answer. We. . .

MR. SPEAKER: The Hon. Member is not going to elicit any further information. The Hon. Chief Minister has categorically said that he is not prepared to answer further supplementary questions.

[1971 ஜூன் 24

THIRU K. T. K. THANGAMANI : It all depends upon the type of question we put before the House. I want to put a question actually.

முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அரசியல் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைச் சீக்கிரமாகக் கூட்ட ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த அறிக்கை அனுப்பப் பட்டிருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்கள் அவ்வளவு பேரும் சேர்ந்த கூட்டத்தைக் கூட்டுவது என்பது நடக்காத காரியம். அதற்காகத்தான் இந்த அறிக்கையைப் பற்றி நம்முடைய தமிழகச் சட்ட மன்றப் பேரவையில் ஒருநாள்—பட்ஜெட் விவாதங்கள் முடிந்த பிறகு அடுத்த கூட்டத்தில்—விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும் அதற்கிடையில் அறிக்கையை முழுமையாகப் படிக்க அவகாசம் இருக்க வேண்டுமென்ற அளவில் அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுப்பது என்பது இப்போது எழவில்லை என்றே கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மத்திய அரசாங்கத் திடமிருந்து நம்முடைய மாநில அரசுக்கு இது சம்பந்தமாக ஏதாவது கடிதங்கள் வந்திருக்கின்றனவா ? அப்படி இருந்தால் அது வெளியிடுவதற்கு உரிய விஷயமாக இருந்தால் வெளிப் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது சம்பந்தமாக எந்தக் கடிதமும் வரவில்லை. இதைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு மாநில ஆளுநர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் 'இந்த அறிக்கை வந்தது; அதைப் படித்துக் கொண்டிருக்கிறோம்' என்று கூறி நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ராஜமன்னார் குழு அறிக்கை மத்திய அரசின் அதிகாரத்தை குறைத்து நம்முடைய அதிகாரத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத் தயாரிக்கப்பட்டது. அப்படி இருக்கும்போது முழுக்க முழுக்க ஸ்டேட் லிஸ்டில் இருக்கும் மதுவிலக்குப் பிரச்சினையில் மத்திய அரசிடமிருந்து பணம் வருமா, மத்திய அரசு என்ன சொல்லுகிறது என்று கேட்டுக் கொண்டிருப்பது சரியா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்களும் இதைத்தான் கேட்டார்கள். இதைப் பற்றித் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி டைரக்டிவ் பிரின்சிபிள் என்பதன் கீழ் 'மதுவிலக்கு' இருப்பதால் இந்திய அரசாங்கம் இதனை இந்தியா பூராவும் அமல்படுத்த வழி இருக்கிறது. இந்திய அரசாங்க அளவில் இந்த மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினால் அது வெற்றிகரமாக அமையும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1971 ஜூன் 24]

Dr. H. V. HANDE : May I know whether the report has been sent to Central Government? Because there is a controversy and a news item had appeared in the press that the Centre had not received the report? May I know from the Hon. Chief Minister whether he has sent the report to the Home Minister and Prime Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களுக்கு அனுப்பாமல் எப்படி இருந்திருக்க முடியும்?

Attack on police personnel at Kivalur

*37 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a Police Inspector of Kivalur and a party of policemen were attacked by a group of persons on 14–10–1969 ; and

(b) if so, whether any investigation has been ordered and the details of the investigation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) இது குறித்துப் புலனாய்வு மேற்கொள்ள ஆணையிடப் பட்டது ; நாகப்பட்டினம், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பு 22 குற்றவாளிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றவாளிகள் மீது சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் குற்றங்களைச் சாட்டி, நாகப்பட்டினம் குற்றத்துறைத் துணை நீதிபதியிடம் இவ்வழக்கை மாற்றினர். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் குற்றவாளிகளென தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 3 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

Prosperity Brigade

*38 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to form Prosperity Brigade in the Districts also; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) சீரணி இந்த மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங் களிலும் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சீரணி மூலம் கடந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள வேலைகளைச் செய்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.